Reg. No. M. 2997.

தனிப்பிரதி அணு 1

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமைதோறும் வெளிவருவது

Bureau de la Direction:—
RUE D'AMBALATADOU AYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி
நெ. 4, புதுவை.

VOL I. புதுவை, பவ-ஞு ஆனி-மீ உகூ-உ (12—7—34) No. 33.

திருமந்திரம்

வித்திடு வோர்க்கன்றி மேலோர் விளைவில்லை
வித்திடு வோர்க்கன்றி மிக்கோ ரறிவில்லை
வித்தினில் வித்தை விதற வுணர்வரேன்
மத்தி லிருந்தோர் மாங்கனி யாமே.

அண்ண லுடலாகி யவ்வனல் விந்துவு
மண்ணிடை மாய்க்கும் பிராணனும் விந்துவுங்
கண்ணுங் கனலிடைக் கட்டிக் கலந்தேரித்
துண்ணி லமிர்தாகி யோகிக் கறிவாமே.

மேலா நிலத்தெழு விந்துவு நாதமுங்
கோலா லடத்திக் குறிவழி யேசென்று
பாலா மமிர்துண்டு பற்றறப் பற்றினன்
மாலான தம்மாள மாளுமவ் விந்தே.

இன்பப் பிறவிக் கியல்வது செய்தவன்
றுன்பப் பிறவித் தொழில்பல வென்னினும்
வன்பிற் கலவிசெய் தாதிப்பி ரான்வைத்த
முன்பிப் பிறவி முடிவது தானே.

அன்புறு சிந்தையின் மேலெழு மவ்வொளி
யின்புறு கன்னியோ டேற விசைந்தன
துன்புறு கன்னியைந் தாடுந் துடக்கற்று
நன்புறு சிந்தையை நாடமி னீரே.

புணர்ச்சியு ளாயிழை மேலன்பு போல
வுணர்ச்சியு ளாங்கே யொடுங்கவல் லார்க்
குணர்ச்சி யில்லாது குலாவி யுலாவி
யணைத்த தணைத்தின்ப மதுவிது வாமே.

உ
திருவருள் துணை

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

(திருவாசகம்)

வித்தகம்

புதுவை.

பவ-வரு ஆனி-மீ 29உ

அன்பு

உலகெலாக்கும் உண்மை நிலைக்கும் இன்றியமையாதது யாது? எனின், அஃது அன்பு என்றே கூறப்படும். உலகத்திலே யாவருக்கும் யாவற்றுக்கும் அன்பு வேண்டும் என்பர். அன்பு இல்லாதவனை இரக்கம் இல்லாதவன் என்பர். அடியாரை அன்பர் என்பர். இறைவன் அன்பு வடிவினன் என்பர். அன்பே சிவம் என்பர் சித்தர். ஆதலால் யாவற்றுக்கும் அடிப்படை அன்பே என்பது வெள்ளிடை. இவ் அன்பு தான் யாது? இதன் பண்பு தான் என்னை? எனின், இவற்றை ஒருவாறு உணர்த்துதற்கன்றே இச் சிறிய கட்டுரை எழுந்ததென்பது. பின் வரும் தேவர் திருவாக்கு அன்பின் பண்பை நன்கு விளக்குகின்றது.

குறள்

அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

(டை-8ம். அதி. அன்புடைமை செ. 3)

(இ-ள்.)—ஆர் உயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு—நிலையாகப் பெறுதற்கரிய உயிருக்கு உடம்பிலுள்ள எலும்போடு பொருந்திய தொடர்பானது, அன்பு வடிவனாகிய சிவம் என்னும் செம்பொருளோடு ஒன்றாகி நிற்றற்குரிய நெறியின் முறைமை என்று ஆன்றோர் கூறுப என்பது.

என்புக்குள் அன்பு உள்ளதென்பதும் உரிய சாதகங்களால் அவ் அன்பைக் காண்பதே அவ் அன்புள் இன்ப வடிவாய் அமர்ந்த சிவம் என்னும் செம்பொருளோடு ஒன்றற்குரிய நெறிமுறைமை என்பதும் இச்செய்யுளால் நன்கு பெறப்படும். பெறப்படவே என்புள் அன்பு இல்லாத விடத்து உயிர் இல்லை என்பதும் வெள்ளிடையாம். இதன் பொருள் தான் என்னை? என்புக்குள் அன்பு இருப்பது எவ்வாறு? எனின், சிறிது கூறுதும்.

அன்பு அம்பு அப்பு என்பன ஒரு பொருட் கிளவி. அன்பு என்றால் என்னை? அது தான் ஐந்து பூ எனப் பொருள்படும். ஐந்து பத்து எனப் படுப்பிப்பது அன்பது என வழங்குகின்றது. அதுபோல ஐப்பு எனபதே அன்பு என்று ஆயது. ஐம்பு என்பது ஐந்து பு — ஐந்து பூ— ஐந்தாவது பூ எனக் கூறப்படலாம். பூ என்பது பூமி எனப்படும். பூமி நிலம் திணை என்பன ஒன்றே. ஆகவே ஐந்தாவது பூ என்னும் ஐந்தாவது திணையே அன்பு எனப்பட்டது என்க. திணை ஐந்து என்ப. அவை குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்பன. ஐந்தாம் திணை எது? அது தான் பாலை என்பது. பாலையில் கானல் நீரன்றி வேறு நீர் இல்லை என்பர் உலகோர். பாலையில் நீர் உண்டு என்பர் சித்தர் குழாம். அண்டமும் பிண்டமும் தம்முள் ஒக்கும் அல்லவா? பிண்டமும் பூமிதானே! பிண்டமாகிய சரீரத்தில் பாலை எது? எனின், அது தான் என்பு எனும் எலும்பு என்று கூறப்படும். ஐந்தாவது தாது இதுவே. என்புக்குள் அன்பு உண்டோ? எனின், அவ் அன்பைக் கண்டவரே அன்பர் எனப்படுவர். அன்பும் என்பும் ஒன்றற்கொன்று தொடர்புடையன; அந்நியோந்நிய சம்பந்தம் உடையன. அன்பு தான் சிவம் என்கின்றனர். சிவனே சீவன், சீவனே சிவன் அல்லவா? உயிரே—சீவனே சிவனாகின்றது — சிவாங்கமாகின்றது அல்லவா? சிவமே உப்பு என்கின்றனர் தத்துவப்பெரியாராகிய சித்தர். ஆதலால் உரிய சாதகங்களால் உப்பில் இருக்கும் துப்பை நீக்கி அன்பில் இன்பைக் கண்டவரே சிவம் என்னும் செம்பொருளைக் கண்டவர் —கண்டு அடையப் பெற்றவர் எனஆம். இவ் அரிய பெரிய மறையை அடக்கியே "ஆருயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு, அன்போடு இயைந்தவழக்கு என்ப" என அருளிச் செய்தார் எமது செந்நாப் போதார் என அறிதற்பாற்று. இத்தகைய அன்பு—அம்பு—அப்பு இல்லாத வழி என்னாகும்? உயிர் வாழ்க்கை முயற்கொம்பேயாம் என்க. இதனையே பின் வரும் திருவாக்கால் ஓர் உவமமுகத்தால் நன்கு வற்புறுத்தினர் தேவர்.

குறள்

அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை
[வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று.

(டை. 8ம் அதி— அன்புடைமை செ. 8.)

(இ-ள்.) என்பின் அகத்தே அன்பு என்னும் அப்பு இல்லையாக (இல்லாதவிடத்து) உயிர் வாழ்வு பெறுவதென்றால், அது பாலை நிலத்தில் காய்ந்த

மரத்துண்டம் தளிர்த்தால் போலும் என்பது. "அன்பகத்தில்லா" என்பது "விருந்து புறத்ததா" என்பதுபோல நின்றது.

என்புள் இருப்பது யாது? அது தான் மஜ்ஜை என்பது. அம் மஜ்ஜையின் சாரமே சுக்கில சுரோணிதம் என்னும் இந்திரியம். சரீரத்துக்கு—உடலுயிருக்கு வேராகிய — சீவன் வசிக்கும் தானமாகிய இவ் இந்திரியம் நீங்கிய விடத்து உயிர்வாழ முடியுமா? அன்றே அந்த க்ஷணமே உடல் பிணமாகுமல்லவா? உயிர் உடலை விட்டுப் பிரிந்து விடும் அல்லவா? பிரிந்த உயிர் அத்தகைய பிறிதோர் பிண்டத்தைப் பற்றுவதே யன்றி வேறு வாழுமாறு இல்லை என்பது இதனல் நன்கு பெறப்படும். அன்பே சிவம் என்கின்றனர் சித்தர். பின் வரும் பிரபல சுருதிப் பிரமாணம் இவ் உண்மையை நன்கு வற்புறுத்துகின்றது.

திருமந்திரம்

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலா
ரன்பே சிவமாவ தாரு மறிகிலா
ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி
னன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.

(ஷை1ம்.தந். 18வது அன்புடைமை செ.1.)

அன்பு வேறு சிவம் வேறு அல்ல என்பதும் இவற்றை வேறு வேறு என்போர் அன்பின் திறன் தெரியா அறிவிலிகள் என்பதும் அவ் அன்பைக் கண்டவரே சிவத்தைக் கண்டு சிவமாந் தன்மை எய்துவர் என்பதும் இவ் அரிய பெரிய மந்திரத்தால் நன்கு வற்புறுத்தப்பட்டமை கண்டு கொள்க. வேதாகம புராண இதிகாசங்களால் முறையிடப்படும் சிவம் என்னும் செம்பொருள் எங்குள்ளது? எனின், என்புள் மறைந்து மறையாய் இருக்கின்றது என்று கூறப்படும். இது பற்றியே என்பு உள் உருகிப் பக்குவப்பட வேண்டும் எனவும் அதுவே இருவினையின் ஈடு அழியும் மார்க்கம் எனவும் அதனுற்றான் சிவாகம தலைப்படும் எனவும் அருளினர் மணிவாசகப் பிரபு என அறிதற்பாற்று.

(திருவாசகம் குலாப்பத்து செ. 3.)

திருமந்திரம்

என்பே விறகா யிறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினு
மன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
யென்போன் மணியினை யெய்தவொண்
[ணாதே.

இதனல், உடம்பை வாட்டி வருத்தி எத்தகைய அருந்தவம் புரியினும் என்புள் இருக்கும் அன்பினால் உருகிக் குழைவார்க்கு அன்றிச் சிவபரம் பொருளை அடைய முடியாது என்பது நன்கு வற்புறுத்தப்பட்டது.

அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவ
னன்பினுள் ளாகி யமரு மரும்பொரு
ளன்பினுள் ளார்க்கே யணைதுணை யாமே.

(ஷை1ம். தந். 18வது அன்புடைமை
செ. 3. 10.)

இதனல் அன்பில் இன்பு உண்டு என்பதும் அவ் இன்ப வடிவினதே சிவம் என்பதும் அவ் அன்பைக் கண்டவர்க்கே அச் சிவம் துணையாகும் என்பதும் கூறப்பட்டன. "உடலாயுளான்" என்றார் சத்தாகிய உடலும் சிவ வடிவமே ஆகும் என்பதுபோதர. "ஈனமற்ற காயமாய் இருப்பன் எங்கள் ஈசனே" எனச் சிவவாக்கியர் அருளியதும் அறிக. உடல் வேத வடிவாதல் பற்றிக் கூறினர் எனினும் ஆம். "வேதத்தின் ஒத்த உடல்" எனத் திருமூலர் கூறியதும் அறிக. இஃது அமயம் நேர்ந்துழி விளக்கிக் கூறப்படும்.

மேலே கூறியவாற்றால் அன்பைக் காண்பதே — அன்பு செய்வதே சிவத்தை அடையும் நெறி—சிவமாகும் நெறி என்பது வெள்ளிடை. அன்பு செய்வது என்றால் என்னை? அன்பு செய்து சிவத்தை அடைவது—சிவமாவது எப்படி? எனின், சிறிது கூறுதும். சிவமே உப்பு என்கின்றனர் தத்துவப் பெரியாராகிய சித்தர். உப்பு என்றால் என்னை? அது தான் இனிமை எனப்படுவது. அஃது அப்பொருட்டாதல்,

குறள்

ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்
[வெயர்ப்பக்
கூடலிற் றோன்றிய வுப்பு.

(ஷை 133ம் அதி—ஊடலுவகை செ. 8.)

என்னும் தேவர் திருவாக்கால் அறியப்படும். "உப்பாதல் சான்றோர் கடன்" என்புழியும் உப்பு இனிமைப் பொருட்டாதல் அறிக. இவ்வாறு கூறுவதால், என்புக்குள் இருக்கும் அன்பு என்னும் அப்பு என்பது இனிமை பயக்கும் உப்பாயே இருக்கிறதா? எனின், இல்லை என ஆம். மற்றோ, துப்பு மலிந்த உப்பாயே இருக்கிறது என்க. உப்பின் இருப்பை வெளிப்படுத்தாதவாறு—உப்பின் இருப்பே சிறிதும் அறிய முடியாதவாறு துப்பு மலிந்த அப்பிற் கலந்து அபேதமாய் இருக்கிறது எனப்படும். உப்பே சிவம் என்பது எவ்வாறு எனின், உப்பே இல்லாத இடம் இல்லை என ஆம். உலகமே உப்பு மயம்; அப்பு மயம் அல்லவா? உப்பு இல்லாவிடின் உணர்வு எனும் உணர்ச்சி ஏது? இதனல் உணர்வே உப்பு, அவ் உப்பே சிவம் எனப்பட்டது என்க. "உணர்வே சிவலிங்கம்" என்றனள் ஔவை.

ஔவை குறள்

உள்ளமே பீட முணர்வே சிவலிங்கம்
தெள்ளிய ரர்ச்சிக்கு மாறு.

(ஷை—அர்ச்சனை செ. 3)

திருவாய் மொழி

"..
உணர்வெனும் பெறும் பதம் தெரிந்து
காடினேன் காடி நான் கண்டு கொண்
[டேன் நாராயணா வென்னும் நாமம்."

என அருளினர் திருமங்கை ஆழ்வார்.

மேலே கூறியவாற்றால் அன்பு என்பது அப்பு தத்துவத்தைக் குறித்ததென்பது வெள்ளிடையாம். அன்பு என்பதனால் அறமும் ஆக்கம் பெறும்; மறமும் ஆக்கம் பெறும். அன்பு என்னும் பொருள் ஒன்றே. வினை பேதத்தால் — அசைவாகிய நிறை பேதத்தால் அறம் எனவும் மறம் எனவும் திரிவதென்பது — தோன்றுவதென்பது. மறம் என்றால் பாவச் செயல் என்கின்றனர். அது தவறு. மற்றோ, அது தான் லௌகிகத்துக்கு ஒத்த ஆண்மைச் செயல் எனப்படும். அறத்தின் மறுதலையே மறமாம். அறத்துக்கும் மறத்துக்கும் அன்பே சார்புடைத்தாம். அஃதே துணை என்க.

குறள்

அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

(ஷை—8ம் அதி—அன்புடைமை செ. 6.)

என்றனர் பொய்யில் புலவர்.

(இ-ள்.) நித்தியத்துவம் பெறுதலாகிய நிவர்த்திக்கே அன்பு துணையாவது என்ப அறிவிலார்; அதன் மறுதலையாய பிறவி நெறி என்னும் பிரவிருத்திக்கும் அவ் அன்பே துணையாகும் என்பது. இதனால் உலகம் வழங்குதற்கும் உண்மை நிலை அடைதற்கும் அடிப்படையானது அன்பே என்பதும், அவ் அன்பை ஆக்கமுறச் செய்தல் அவசியமே என்பதும் நன்கு பெறப்படும். அன்பு செய்வது என்றால் என்னை? அன்பை ஆக்கமுறச் செய்வது எவ்வாறு? எனின், சிறிது கூறுதும். அஃதாவது அன்பு எனும் அப்பை உப்பாக்க வேண்டும். இனிமையாக்க வேண்டும். அன்பில் இன்பைக் காண்பதென்பது இதுவே என்க. அப்பு தத்துவத்தில்—அப்பு என்பதில் உள்ள நிறைமீறிய துப்பை—துப்பு என்னும் களிம்பை இறக்கி—ஏற்ற நிறையுடைய துப்பை இறக்கி, இயற்கையாய் அமைந்துள்ள உப்பு நிறைக்கு ஒப்ப ஏற்றமாய் இருக்கும் அதன் துப்பு நிறையை இறக்கிச் சமப்படுத்துவதுதான் அன்பு செய்வதென்பது. இதன் பொருள் நன்கு புலப்படுமாறு இன்னும் சில கூறுதும். அப்பில் உப்பு உண்டு. ஆனால் அது துப்பு என்னும் களிம்பு, களிம்பாகிய அசுத்தம் மலிந்து பிரிபடாதவாறு அபேதமாகக் கலந்திருக்கிறது. ஆதலால் அதற்குரிய சாதகங்களால் அவ் அப்பில் இருக்கும் களிம்பாகிய அசுத்தம் என்னும் துப்பை நீக்கினால், அவ் அன்பு என்னும் அப்புத் துப்பு நீங்கி உப்பாகும்—இனிமையாகும். அன்பில் இன்பைக் காண்பது இதுவே என்பது. அன்பில் இன்பு என்னும் சிவத்தைக் காண்பது – அன்பே சிவமாய் அமர்ந்திருப்பது — அமர்ந்திருக்கும் நெறி இதுவே என்பது.

"அன்பினில் விளைந்த ஆர் அமுதே"

என்பது திருவாசகம் (பிடித்த பத்து செ. 3.)

என்புக்குள் அன்பு; அன்புக்குள் இன்பு; அவ் இன்பே சிவம் என அறிதற்பாற்று. பிரமமே ஆனந்தம் எனவும், சக்லம் எனவும், அமுதம் எனவும் வேதம் முறையிடுகின்றதும் அறிக. இன்பு எனப்படும் உப்பானது துப்பு மலிந்து அதனோடு அபேதமாய்க் கலந்து நிற்றல் பற்றியே,

"உப்பென்றால் உருவான உப்பேது
[மக்காள்"

என்றனர் சித்து மூர்த்தி ஒருவர். அப்பில் உளதாய உப்பு பூரணப்பட்டதாய் இல்லாமையால் ஏற்ற சாதகங்களால் அதனை உருப்படுத்த வேண்டும் என்பதே இதன் பொருளாகும். அஃதாவது துப்பு மலிந்த உப்பாய் இருக்கின்றமையால் அத்துப்பை நீக்கி இரண்டையும் சமப்படுத்த வேண்டும் என்பது. அவ்வாறு உருப்படுத்தினால் ஆம் பயன் என்னை? எனின், அவ் அப்பு என்னும் அன்பு இன்பாகும் என்க. உலகியலினும் நோய் மலிந்த உடம்பினனாய்ச் செல்லாத்தீ வாழ்க்கை உடையானைக் காண்போர் "இவன் உருப்படுகின்றானில்லை" எனக் கூறுவதும் அறிக. மேலே கூறியவாறு ஏற்ற சாதகங்களால் அன்பு இன்பானால் நண்பு உண்டாகும் என்க. பின்வரும் தேவர் திருவாக்கும் இவ் உண்மையை நன்கு வலியுறுத்துதல் கண்டுகொள்க.

குறள்

அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

(ஷை 8ம். அதி. அன்புடைமை செ. 4.)

(இ-ள்.) அன்பினால் காதல் என்னும் இன்பு உளதாகும். அதனால் பிறிதோராற்றானும் அடைதற்கரிய நண்பு என்னும் சிறந்த நிலை உளதாகும் என்பது.

காமத்தால் அடையப்படுவது காதல் என்னும் இன்பு. ஆதலால் காதல் என்பது உலமாக்களுக்குரிய அசுத்த காமமன்று. "காதலும் ஆக்கி அளித்தழிக்கும் கந்தழியின் பேருருவே" என்றனர் பெரியார். வீடுபேற்றின்பமாகிய அன்பில் இன்பு இதுவே என்க. "அது தான் பிறப்புப் பிணி மூப்பு அவலக்கவலைக் கையாற்றினீங்கி மணியினது ஒளியும் மலரினது நாற்றமும் சந்தனத்துத் தட்பமும் போல உண்ணின்றெழுதருமொரு பேரின்ப வெள்ளத்ததென்பது" என்றார் இறையனார் களவியல் உரையாசிரியர்.

அன்பு இன்பானால் உளதாகும் நண்பு என்பது தான் என்னை? எனின், அதுதான் முன்னிலை யாவும் தன்னிலையாதலாகிய தூய உறவு என்க. முன்னிலை தன்னிலையானால்—நண்பானால் ஒருவன் உஞற்றவேண்டிய தவம் வேறில்லை என்பது வேத உண்மையாதலின் வாய்மையான தவப் பயன் இதுவே என்க.

"நண்பே அருளாய் என் உயிர்நாதா
நின் அருள் நாணாமே"

என்றனர் மணிவாசகர் (திருவாசகம்).

இத்தகைய அருமை பெருமை வாய்ந்த அன்பின் பண்பும் பயனும்

அறியாது, அதனை ஆக்கமுறச் செய்யும் நெறியும் அறியாது, மேலேகூறியவற்றுக்கு மாறாக, அன்பு என்றால் ஒருவகை குணம்; அஃதாவது பல்லைக் காட்டிச் சிரித்தல்; பிரியமாகத் தலை பசைத்தல்; யார் எது சொன்னாலும் கோபிக்காதவன் போல் ஆம் ஆம் என்று கூறி ஈசா! முருகா! ஷண்முகா! மீனாட்சி! கோவிந்தா! கிருஷ்ணா! ராமா! சிவம்! என்று பிறர் அறியக் கூப்பாடு போடுதல்; வேடம், பூசை; கைசாடை; கண்சாடை; ஆலயங்களிற் சென்று அசையாமல் நிற்பது; நீலிக் கண்ணீர் வடிப்பது; பக்கத்தில் நிற்பவர்களைச் சாடையாகப் பார்த்துக் கொண்டு உச்ச இசையோடு தோத்திரங்களைப் படித்தல்; அபிமானத்தால் உறவினர் நண்பர்களுக்காகத் துன்பமடைந்து கண்ணீர் விடுதல் முதலிய இன்னோரன்ன பல செய்கைகளே அன்பின் பண்பு என ஓலமிடுவோர் எம்போலிய முட்டை மதியினர் என்க. உலகியல் இதுவே என அறிதற் பாற்று. அன்பு என்பதன் பெற்றி அறியாதார் பிரசங்கங்கள் புரிகின்றனர். "சொற் பொழிவுகள்" தமோ மேகம் போல் வருஷிக்கின்றனர். ஐயகோ! பாவம்! பாவம்! "பொக்கை வாயன் பொரி மாவை மெச்சுவன்" என்பது போன்றதே இவர் சீர்மையும் ஆம் என அறிதற் பாற்று. உண்மை எங்கோ இருப்ப, அதனை அறியும் ஆற்றலும் காதலும் இன்றி "யாம் அன்புடையேம்! சிவபத்தியுடையேம்! அவர் அன்புடையர்! முத்தி வாயிலில் நிற்கின்றார்! அடடா! என்ன அன்பு!" என நீலிக் கண்ணீர் வடித்து ஓலமிட்டுச் சாதலடைவதே உலகியலாகின்றது. அன்பு பூண்டு ஒழுகுவதென்றால் வாய்ப் பேச்சால் ஆமோ? "பூணொணாததோர் அன்பு பூண்டு" (திருவாசகம்-திருக்கழுக்குன்றப் பதிகம் செ. 4.) என்று அருளினனே மாணிக்கம். இவ்வாறு கூறிய அவன் அறிவிலியா? பூணஒண்ணாதது—அரியது என மணிவாசகர் தம்மாலேயே விதந்து கூறப்பட்ட அன்பு — எத்தனையோ கஷ்டங்களோடு அவரால் அரிதிற் பூணப்பட்ட அன்பானது அம் மணிவாசகரைப் பூசித்தற்கும் அருகராகாத எம்போலிய கயவரால் வாய்ப் பேச்சால்—சில நடை நொடிகளால்—நீலிக் கண்ணீரால் எளிதிற் பூணத்தக்க தொன்றாகுமா? அன்பு செய்வதற்கு நாண் இடர்ப்படை என்றார் இடைக்காடர் தாம் அருளிய மூவடி முப்பதில் (இன்பக் கூறு சூக்தம் 5.) நாண் நாணம் என்பதன் பொருள் மேல் "அருள்" என்னும் கட்டுரையில் விளக்கிக் கூறப்படும்.

அமிர்தம் உதித்தது எங்ஙன்? ஐந்தாம் திணையில் என்ப. அங்ஙன் ரக்ஷககுருநாராயணன் இருக்கின்றான். அ+இ=அரி — ஹரி எனப்படும். ஹரி நாராயணன் (நார்+அணை+அயனன்) நார் என்னும் அன்பில் சயனம் கொண்டவன் — குண்டலி சேடசயனன்—ஆடரவை ஆபரணமாகக் கொண்டவன் என்க. அவனே சிவனாவன்—சிவன்—பாம்பை அணையாகக் கொண்டவன். அயனம், சயனம், அணைதல் அணிதல் என்பன ஒன்றே. இது தான் கோலோச்சும் இடமான பாலை — சுத்தப் பாலை; அனைத்தையும் சுடுகின்ற காடு—சுடுகாடு. பாலையில் காய்ந்த வெய்யலும் நிலவும் என்ன பயனைத்தரும் என்பர் உலகோர். பெரும் பயனைத் தரும் என்பர் சித்தர் குழாம். பாலையில் குடியிருப்பு உண்டோ? குடியிருப்பவன் பித்தன் அல்லவா? இப் பித்தன், தனக்கே உரியவன் என்று வேடத்தால் மயங்கி அவனை அடைய முடியாது சாதலடைகின்றது உலகம். இதுதான் ஐந்தாம் திணை; ஏகாக்ஷரம் வாழும் திணை; சித்தர்களுக்குரிய திணை. எவைக்கும் முதலாவது—மூலமாவது இது—மாஅகண்டாகார வெளி—லலாட வெளி என்க. சயனம் யாங்ஙன்? பணமுடி வெண்குடையாய் ஞான குண்டலி பின் அணைமேல்—பணைமேல்—பணைப் பின்மேல் சயனம். பணை கோளினது என்க. அதன் சிரம் பணமுடி எனும் நாமம் உடையது. அதுதான் வெண்குடை — மதிக்குடை— சிதோஷ்ண சமரசக் குடை—ஜக ரக்ஷகக் குடை என்பது. ஞான குண்டலியை ஆரமாய்ப் பூண்டவன் யார்? அவன் தான் அரன். சுவாலை சமமுறப் பூண்டான். அதி உஷ்ணம்தான் அதிசீதளம். அங்கியில் அன்பு உதயம்; அன்பில் அங்கி உதயம். இவ் வேத வாக்கியம் அதி சூட்சுமமானது. ஆழ்ந்து உணர்வோர்க்கு உண்மையை அறிவிக்கும். அன்பு செய்வதென்றால் சுலபமான காரியமா? ஐந்திணை அன்பு "அன்பின் ஐந்திணை" எனப்பட்டது. அன்பு எங்கே மறைந்து கிடக்கின்றது? தேயுவின் ஆதிக்கம் பெற்ற ஐந்தாம் திணைக்குள் மறைந்து கிடக்கின்றது. (தேயு+அம்=தெய்வம்.) "அன்பே சிவம்" என்பதன் பொருள் இதுவே. அவ் அன்பைக் காண்பதே அடைவதே கடவுளைக் காண்பது அடைவது என்பது. பாலைக்குள்—ஐந்தாம் திணை எனும் என்புக்குள் மறைந்து கிடக்கின்றது அன்பு எனும் சிவம். எவ்வாறு மறைந்து கிடக்கின்றது? களங்கம் எனும் களிம்பிற் கலந்து மறைந்து கிடக்கின்றது; கேட்பார் அற்று — கவனிப்பார் அற்று பார்ப்பவர்களுக்கு—உலகத்தவருக்குக் குற்றம் பொருந்திய களிம்பு எனத் தோற்றுவதால் — துப்பு எனத் தோற்றுவதால், அக் களிம்பாகிய துப்புடன் அபின்னமாகப் பஞ்சீகரணிக்கப்பட்டு, தன்னை மறைத்துக் கொண்டு மறைந்து கிடப்பதால் நிஷேதப் பொருளெனக் காணப்படுகிறது. குருவருளால் — உரிய சாதகங்களால் அதைத் தேடிக் கண்டு எடுத்து அதன் கண் உள்ள துப்பை நீக்கி ஜீவாமிர்தம் எனும் அன்பை வெளியேற்றிக் காண்பதுதான் அன்பு செய்வதென்பது; அன்பெனும் சிவத்தை ஆக்கமுறச் செய்வதென்பது. இப் பெற்றி கைவருதற்குரிய சாதனம் என்னை? எனின், அது தான் மறைபொருளாக

னது—மறை என்று கூறப்பட்டது என்க. மறைந்து கிடந்து—தன்னைத் தானே மறைத்துக் கொண்டு இருக்கும் கள்ளனை—உள்ளங் கவர் கள்வனைக் கைப்பற்றவேண்டும். எவ்வாறு கைப்பற்ற வேண்டும்? இனத்தை இனத்தால் பிடிப்பது போல களவினால்தான்—களவுத் தன்மையாற்றான் கள்வனைக் கைப்பற்ற வேண்டும். களவுணர்ச்சியால் — களவு என்னும் கந்தினால் — அருவமான உணர்ச்சிமயமான கந்து என்னும் களவால்— அருவமான கந்தினால் — கந்தருவத்தால் (கந்து + அருவம்) — கந்தருவ வழக்கம் எனப்பட்ட களவொழுக்கத்தால் — மன்றலால் பிடிக்கவேண்டும் என்க; அந்த அன்பை —அன்பெனும் சிவத்தை ஆக்கமுறச் செய்ய வேண்டும் என்க. இவ்வுண்மையையே களவியல் என்னும் அரிய பெரிய வேத நூலில் காப்புக்கடை என்னும் சூத்திரங்களால் நன்கு விளக்கி யருளினார் நமது இறையனாராகிய ஆலவாயில் அவிர்சடைக் கடவுள் என அறிக.

அகப் பொருள்

அன்பி னைந்திணைக் களவெனப் படுவ
தந்தண ரருமறை மன்ற லெட்டனுட்
கந்தருவ வழக்க மென்மனார் புலவர்.

(காப்பு)

களவு கற்பெனக் கண்ணிய வீண்டையோ
ருளநிகழன்பி னுயர்ச்சி மேன.

(கடை)

இவற்றின் உரை அமயம் நேர்ந்துழி விரிக்கப்படும். தாதுக்கள் எழு. எட்டாவது இடம் மன்றல். ஆண்பெண்ணது அன்பு — சிவம் — பிரமம். மன்றல் எட்டு என்ப. இத்தனை மன்றல் இருக்கும் கந்தருவத்தாலன்றி சிவம் சத்தி ஒன்றாக் குழைவது ஏது? உடலும் உயிரும்ஒழிவற ஒன்றி ஞான சத்தி வடிவமாதல் ஏது? ஓமும் என்றால் என்னை? பிரணவ வடிவமாகிய— பிரணவம் என்னும் நாதவடிவமாகிய ஓ வடிவமே ஞான சத்தி வடிவம் அல்லவா? கந்தருவம் என்றால் என்னை? அதுதான் யாழோர் கூட்டம். யாழ் என்றால் என்னை? என்புகளோடு இணைக்கப்பட்ட நரம்புகளை யாழ் என்ப. அவை தாம் உணர்ச்சி எனும் பெரும்பதம் நடமாடுதற்குரிய கருவி என்க; நாதம்எனும் வேதம் ஒலித்தற்குரிய கருவி என்க.

" உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து "
என்றார் திருமங்கை ஆழ்வார்

"சாமவேதக் கந்தருவம் விரும்புமே"
என்றார் நமது அப்பர்.

"உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகி அன்பு வடிவாகிய சிவம் அவ் ஆக்கையுள் இருக்கும் பெற்றி எவ்வாறு? சரீரத்திற்கு உள்ளாக என்புக்கு உள்ளாக இயைந்து பங்கமடைந்து கிடக்கின்றது என்க. உள் இருப்பதே இயலாகக் கொண்டது— உள் இயங்கும் தன்மையுடையது— இயங்கி ஒலிக்கும் பெட்புடையது எனினும் ஆம். அப் பொருள் தான் இயவுள்— கடவுள் என்க. இயை + உள் = இயவுள்.

"பெரியோ ரேத்தும் பெரும்பெயர்
இயவுள்"

என்பது திருமுருகாற்றுப்படை (பழமுதிர்சோலை அடி 274)

மேலே கூறியவாறு அன்பு செய்தால் — அன்பை ஆக்கமுறச்செய்தால் ஆசானாகிய குரவன் – நாதன்—குருநாதன் உருப்படுவன், வெளிப்படுவன், காணப்படுவன். அன்பினால் ஆவியோடு ஆக்கை கசிந்து உருகவேண்டும். அவ்வாறு உருகினாலன்றி அருள் என்னும் செம்பொருள் சித்திக்காது; அருட்பிரசாதம் சிவப்பிரசாதம் கிட்டாது என்க.

நன்கொடை

"வித்தகம்" எனும் எமது பத்திரிகைக்கு மனமுவந்து நன் கொடையாக ரூபா மூன்று அளித்த (Colombo, Sun Life Insurance Agent, S. Sandrasegaram) கொளும்பு, சன் லயிப் இன்சூரன்ஸ் எஜெண்ட் திருவாளர். எஸ். சந்திரசேகரம் அவர்களுக்கு எமது மனமார்ந்த வணக்கம் என்றும் உரிமையாகப் பாலது.

[ப–ர்]

திருவாசகம்

"அன்பினா லடியே னாவியோ டாக்கை
யானந்த மாய்க்கசிந் துருக
என்பர மல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனொர்கைம் மாறு
...."

(ஷை கோயிற் திருப்பதிகம் செ. 2)

என்றார் நமது மணிவாசகப் பிரபு.

குறள்

அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு

(ஷை-ம் 76-ம் அதி—பொருள் செயல் வகை 7.)

என்றனர் நமது பொய்யில் புலவர்.

(இ-ள்.) அன்பு செய்தலால் பிறக்கும் அருள் என்னும் ஞானக்குழந்தையானது வாய்மையான பொருள் என விதந்து கூறப்படும் மகைசுவரியமுடைய செவிலித் தாயால் ஆக்கமுறும் என்பது. வாய்மையான பொருள் இன்னதென்பது (வித்தகம் இல. 18) "பொருள்" என்னும் கட்டுரை நோக்கி அறிக. அன்பு செய்து அன்பு இன்பானால் அருள் என்னும் குழவி ஈனப்படும் என்பது இவற்றால் வெள்ளிடையாம். ஆதலால் அன்பு இன்றேல் அருள் இல்லை என்பது சத்தியம்.

"ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல் வெயர்ப்பக்
கூடலிற் றோன்றிய வுப்பு.

என்பதில் உப்பு என்னும் சொல் காமப் பெருக்கத்தாலாய இனிமையைக் காட்டுகிறது. வயிரம்—வசிரம்—

பெண்பாற் புலவர்கள்

யாழ்ப்பாணம் வேலணையூர்,

பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம்.

அவர்கள் எழுதியது

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியருக்கே உரியது)

(32-ம் வாரத்தொடர்ச்சி)

பாரிமகளிர்

இவர்கள் அங்கவை, சங்கவை எனும் பெயர்களை உடையவர்கள். கானகத்து முல்லைக்கொடி நாத்தழும்பிருக்கப் பாடதாயினும் குறிப்பறிந்து அதற்குத் தன் கறங்குமணி நெடுந்தேரை நல்கிய கடையெழு வள்ளல்களிற் றலை சிறந்த மாரிநிகர் பாரியின் மகளிராவர். பாரி மூவேந்தரால் கொல்லப்பட அவன்றனுயிர் நண்பராகிய வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலரால் இவர்கள் ஆதரிக்கப் பட்டார்கள். நட்புக் கடனாற்ற வெண்ணிய புலவர் பெருமான் இவர்களை அழைத்துக் கொண்டு இருங்கோவேள், விச்சிக்கோன் எனுமரசிருவரிடஞ்சென்று இவர்களை மணந்து கொள்ளுமாறு வேண்டினர். அவர்கள் மூவேந்தர்க்கஞ்சி மறுத்தனர். இதனால் கபிலர் இவர்களைப் பார்ப்பாரிடம் ஒப்பித்துவிட்டுப் பாரியின் பிரிவிற் காற்றாது வடக்கிருந்திறந்தார்.

இவர்கள் பார்ப்பாருடன் வதிகையில் ஓர் நாள் ஔவையார் மழையில் நன்கு நனைந்தவராயிவர்களகம் புகுந்தனர். இவர்கள் ஔவையாருடம்பி லிருந்த ஈரத்தைப் போக்கியவருக்கு ஓர் நீலச் சிற்றாடையை உதவினர்.

வச்சிரம் என்றால் உப்பு என்பர் மொழிநூல் வல்லுநர். வைரம் வச்சிரம் வீரம் விரியம் என்பன ஒன்றே. உப்பு என்றால் சிவம் என்பர் மொழிநூலார். உப்பு என்பது இனிமை என்னும் உணர்வைக் குறிக்கும். உப்பில்லாமல் உணர்வில்லை என்ப. ஆதலால் அன்பு என்னும் அப்பு உப்பாக வேண்டும். அப்பு உப்பாதல் எப்படி? கைப்பு எனும் களிம்பு நீங்கினால் அப்பு கசிவற்று உப்பாகும்; களிம்பில் கலந்திருக்கும் உப்பு வெளிப்படும் என்பது. அன்பு இன்பமாகும். அக் களிம்பை அகற்ற அன்பு செய்ய வேண்டும். அது களவு என்பதாற்றான் கைகூடும். அக் களவு—மறம்—மறத்தாறு புறப்பயில்வு எனப்படும். அப் புறப்பயில்வு என்னும் மறத்தாறு அழுக்குடையது. இது தான் வடு நீங்கப் பெருத கத்து என்பது. அவ் அழுக்குடைய மறத்தாறு மறம் என்னும் கடினத்தன்மையுடைய — ஆண்மை என்னும் எல் இயலையுடைய பயில்வுகளால் முயங்கப்பட்டுழி, அம்முயக்கம் (நிறை முறையான சையோகம்) அன்பு என்னும் அப்பு தத்துவத்தை இயக்கும்; தன் முயக்கத்தால் அப்பை இயக்கும். இந்த மறம் எனும் அழுக்கு—ஓதம் — ஊத்தை அப்பு என்பதில் உள்ள களிம்போடு நிறை கொண்ட கந்தருவ வழக்கமெனும் சையோகத்தால் குழைக்குழி— பஞ்சீகரணிக்கப்பட்டபோது இரண்டு அழுக்குகளும் சாதலடையும்—மறையும்—நீறும்—இரியும்— இரிந்து நல் அறமெனத் திரியும்; திரிந்து இன்பமாகும் — இன்பமான உப்பாகும்; உப்பு என்னும் சிவமாகும்; உப்பு என்னும் வச்சிரம்—வைரம்—வீரியம் —விரியம் எனும் விந்து ஆகும்— விந்து எனும் இந்து ஆகும்—இந்து மதம் சித்திக்கும் என்க.

இத்தகைய மகத்துவம் பொருந்திய விந்தை—சக்தி—பிரமத்தை உற்பத்தி செய்தற்குத் தான்—நிரோதம் செய்வதற்குத் தான்—நிலை பெறச் செய்து அஃது என்றும் வற்றாத ஊற்றான உண்ணாமுதாய்-அருணனி சுரக்கும் அமுதாய் எடுக்க எடுக்கக் குறையாமல் உலவாக்கிழி என—மூல பண்டாரம் என — ஞான நேத்திரம் என விளங்கிக் கோலோச்சுவதற்குத் தான் அன்பு செய்ய வேண்டும் என்பது.

இதுகாறும் கூறியவைகளால் என்புள் இருக்கும் அன்பு என்னும் அப்பில் உள்ள துப்பை ஏற்ற சாதனங்களால் நீக்கி அதனை இன்பு என்னும் உப்பாக்குவதே அன்பு செய்தல் என்பதும், அன்பே சிவமாய் அமர்ந்திருத்தல் என்பதன் உண்மை இதுவே என்பதும் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்.

ஆடையைப் பெற்ற அருந் தமிழ்த் தாயார் அகமிக மகிழ்ந்தவராய்

"பாரி பறித்த கலனும் பழையனூர்க்
காரி யன் ஈந்தகழைக் கோலும்—சேரமான்
வாராயோ வென்றழைத்த வாய்மையும் [இம்மூன்றும்
நீலச் சிற்றாடைக்கு நேர்.

எனும் அருங்கவியை அன்போடு கூறினர்.

ஆடையை உதவியதோடமையாது கன்றுங் கனி புதவுமாறு தம்மிடமிருந்த இலைக்கறியோடு கூடிய அன்னத்தையும் அவருக்கு அருத்தினார்கள். இவர்கள் வரலாற்றை யறிந்த ஔவையார் இவர்களைத் தெய்வீகன் எனும் அரசனுக்கு மணம் புரிவித்தார். அம்மணச் சடங்கிற்குத் தமிழ்த் தாயார் முடியுடை மூவேந்தரை அழைத்தமையையும், அவர் அங்குச் செய்த அற்புதங்களையும் அவர் வரலாற்றில் விரித்துக் கூறுதும். நிற்க,

இவர்கள் இருவரும் தம் தந்தையின் பிரிவைக் குறித்து

"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவில்
எந்தையு முடையேம் எங்குன்றும் பிறர் [கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்யாம் எந்தையு [மிலமே."

எனத் தாய் முகந்நியாத்த கன்று போல் வருந்திக் கூறிய செய்யுள் ஒன்று புறநானூற்றில் காணப்படுகிறது. இஃது கற்பார் கேட்பார் உளங் கொள்வார் உள்ளங்களை உருக்கி யவர் தம்மைத் துன்பக்கடலி லாழ்த்தி விடுமென்பதற் கையமில்லை.

ஓர் நாளில் சேர்ந்த இன்பத்தை யேனும் துன்பத்தையேனும் அடுத்த கிழமையிலக் நாளிலேனும் அடுத்த திங்களில் அக்கிழமையிலக் நாளிலேனும், அடுத்த ஆண்டு அம்மதியிலக் கிழமையிலக் நாளிலேனும் நினைந்தலும் அதனையுறலும் உலகியல்பு. இவர்களும், 'அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் நிகழ்ந்ததை இற்றைத்திங்கள் இவ்வெண்ணிலவில் நினைத்து' வருந்தினார்கள்.

"மாரி யொன்றின்றி வறந்திருந்த காலத் [துப்
பாரி மடமகள் பாண்மகற்கு—நீருலையுள்
பொன்றந்து கொண்டு புகாவாக நல்கினாள்
ஒன்றாரு முன்றிலே யில்"

எனும் பழமொழி வெண்பாவால் இவர்களுள் ஒருவர் மழையில்லாத காலத்தில் இரந்து வந்த ஒரு பாணனை உண்பித்தற்குச் சோறு பெருமையால் பொன்னை உலையிற் பெய்து சோறாக்கிக் கொடுத்தார் என்பது தெரியக் கிடக்கிறது.

பூதப் பாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு.

இவர் பூதப்பாண்டியனுடைய பட்டத்துத் தேவியார். இவர் தம் நாயகன் இறந்த வயயத்துத் தீப்பாய்ந் துயிர் துறக்க எண்ணிய தம்மைத் தடுத்தவர்களை நோக்கி

"பல்சான் றீரே! பல்சான் றீரே!!
செல்கெனச் சொல்லா தொழிகென [விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே!!!
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் [திட்ட
காழ் போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங்காட் டுப்பண்ணிய கருங்கோட் டிம
நமக்கரி தாகுக தில்ல வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும் [பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோரற்றே."

எனக் கூறிவிட்டுத் தீப்பாய்ந்து உயிர் துறந்தார். இவரதிவ் வரும் பெருஞ் செய்கையைக் கண்ட மதுரைப் பேராலவாயர் எனும் பெரும் புலவர்

'நீர்வார் கூந்தல் இரும்புறந் தாழப்
பேரஞர்க் கண்ணள் பெருங்காடு நோக்கித்
தெருமரு மம்ம தானே தன்கொழுநன்
முழவுகண் டுயிலாக் கடியுடை வியனகர்ச்
சிறுநனி தமிய ளாயினும்
இன்னுயிர் நடுங்குந் தன்னிளமை புறங் [கொடுத்தே'

எனப்பாராட்டிக் கூறினர்.

(தொடரும்)

அறிவிப்பு

கடிதர்களின்
அபிப்பிராயங்களுக்கு
அவர்களே பொறுப்பாளிகள்.

பிழை திருத்தம்

32-ம் இலக்க "வித்தகம்"

ஈழநாடும் தமிழும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
2	16	திருத்தணிமாமலை ...	திருத்தணிகைமாமலை.
,,	17 ... -	,,	,,

யோகம்

பக்கம்.	பிரிவு.	வரி.	பிழை.	திருத்தம்.
4	2 ...	8	விளக்திருப்பது ...	வளைக்திருப்பது.
,,	2 ...	25 ...	முனைப்பற்று ...	முனைப்புற்று.

Sandhanam Printing Works, Pondicherry. Le Gérant, R.Nagarattinam